Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# ஈழத்து திருக்கேதீச்சர ஆலய சிற்பங்களும் இசைக்கூறுகளும் ஓர் பார்வை

5

**முனைவர் ஸ்ரீநாகபூஷணி அரங்கராஜ்**
**முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
yallnakam@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஈழத்து சிவாலயங்களுள் பிரசித்தி பெற்றது திருக்கேதீச்சரம். பின்னைப் புதுமைக்கும், முன்னைப் பழமைக்கும் சிறப்புக் கொடுக்கும் ஈழத்து திருக்கேதீச்சர ஆலயம். பல ஆண்டுகளின் முன் நன்னிலையிலிருந்த காலகட்டம், ஈழத்தமிழர் வாழ்வும் நன்னிலையில் இருந்தமையை சிறப்பாக எடுத்துக்காட்டும். இதில் பிரதானமாக மாதோட்டத்தமைந்த திருக்கேதீச்சரத்தின் புராதன தமிழர் தனிப்பெருந் தலைநகராய்த் துவஷ்டா மரபினர் ஆட்சியிலிருந்த காலகட்டம், பின் இராஜராஜபுரமாய் சோழர் பரிபாலனத்திலிருந்த கட்டம் ஒன்று, மேல், சிங்கையாரியச் சக்கரவர்த்திகள் பரிபாலனத்திலிருந்த கட்டம், என நான்கு வகையாக, இவ் ஆலயம் பரிபாலிக்கப்பட்டது.

ஈழத் தமிழிரினதும் திருக்கேதீச்சரத்தினதும் பொற்காலம், சோழராட்சிக் காலமெனலாம். இக் காலத்தில் இவ்வாலயம் உயிரூட்டம் பெற்றது. சம்பந்தர், சுந்தரர் சுவாமிகளால் பாடப்பெற்ற சிறப்பையுடைய காலமாகும். பெயர் நிலையில் கல்வெட்டு குறிக்கும் ”இராஜராஜபுரம், இராஜராஜேச்சரம், திருவீராமீச்சரம் பற்றிய சிறப்புக்களை உள்ளடக்கிய-தாக இருந்ததாக அல்பேட் அவர்களால் எழுதப்பட்ட “விச்ச கன்ம விநிச்சய விமர்சனம்” எனும் நூல் சுட்டுகின்றது. இவ் ஆலயத்தில் இராஜேந்திர-சோழனால் அமைக்கப்பட்ட நீரகழி, புறவரன், நன்னீரகழி, அகவரன், கோயில் கோபுரம், மாடவீதி, உள்வீதி சிற்பங்கள், கலைநயமும் இசைச்சிறப்பும் நேர்த்தியான தன்மையும் கொண்டு விளங்குபவையாகும். இவற்றைவிட பிரதான மூர்த்தி, சிற்ப உருவங்கள், சிலைகள் தத்ரூபமாக இம் மன்னனாலே அமைக்கப்பெற்றன. உயிர்த்துவமான, ஆலய கட்டிட சிற்பங்களின் சிறப்புக்களை விரிவாக பகுத்தாய்ந்து கூறுவதே இவ் ஆய்வின் நோக்கமாகும். எதிர்வரும் சமூகம், திருக்கேதீச்சர ஆலய சிற்பங்களின் திறப்பாடுகளை அறியும் வகையில் விளம்புவதே இவ் ஆய்வின் பயனாக அமைகின்றது. இவ் ஆய்வு கள ஆய்வாகவும், விபரண ஆய்வாகவும் அமைகின்றது.

**திறவுச் சொற்கள் :-** திருக்கேதீச்சரம், சிற்பங்கள், சோழர், ஈழம் / சாசனம், மாதோட்டம், கோயில்.

## திருக்கேதீச்சர ஆலய, சிற்ப இசைக்கூறுகள்

மாதோட்டத்தை இராஜராஜபுரம் எனப் புனர்நிர்மாணச் சிற்பி இராஜேந்திர சோழன் அங்கிருந்த திருக்கேதீச்சரச் சிவாலயத்தையும் சோழர் சிற்பப்பணியிற் புதுக்கிப்படைத்த வரலாற்றை நாம் விரிவாக நோக்கலாம்.

மாடமாளிகையொன்றுக்குச் சுதையோவியம் அழகு தருவது போல் நகரமொன்றுக்குச் சிவாலயம் அழகு தருவதாகும். சிவாலயத்தையே நகர் என்று வழங்கிய வழக்கம் பழந்தமிழிலக்கியமான புறநானூற்றிலுண்டு. தமிழர் நகர்களுக்கு சிவாலயங்கள் இன்றியமையாதன என்ற நிலையைக் காட்டுகின்றது இவ்வழக்கம். அதற்கிணங்க இராஜராஜேந்திரன் தானமைத்த இராஜராஜபுரத்தில் ஏலவேயிருந்த திருக்கேதீச்சரக் கோயிலை புதுக்கியமைப்பானாயினான். உருவுந்திருவும் மிக்க சிற்பக் கோயிலமைப்பதிற் சோழர்க்கிருந்த புகழை மேம்படுத்தவும் நகர்ப்பெருமைக்கேற்ற பெருஞ் சிவாலயம் வேண்டுமென்ற எண்ணம் பற்றியும் பெருமைக்கெல்லையாயிருக்குஞ் சிவனுக்குப் பெரிய கோயிலமைப்பதொன்றே அவன் பெருமையைப் பேணுவதாக இருந்தது. அம்மன்னன் அமைக்குங் கோயில் விசேட சிற்ப விசித்திரப் பெருங்கோயிலாகவே திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

முதலில் உத்தம சிவாச்சாரியார்களோடு உசாவிப் பாலஸ்தாபனத்துக்காகிய ஏற்பாடுகளெல்லாஞ் செய்து கொண்ட மன்னன், திருக்கேதீச்சரன் சந்நிதியில் நின்று பின்வருமாறு பிரார்த்தித்து இவ் ஆலயத்தை புணர்நிர்மாணித்தான் என்று திருக்கேதீச்சர வரலாறு கூறுகின்றது.

“எம்மை ஆளும்பொருட்டுத் திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே, என்னுள் தோன்றாத் துணையாய் வீற்றிருக்கும் நீ தந்த மனவளம் பொருள் வளங்கொண்டு நினது கோயிலைப் புதுக்கி அமைக்கும் ஒரு வேட்கை என்பால் எழுந்திருக்கிறது. சில காலமாக என் நினைவையுறுத்திக் கொண்டிருக்கும் இந்த வேட்கை நிறைவுறும் வரையும் சுவாமிக்கென்று இங்கியற்றும் பாலாலயத்திற் கருணைகூர்ந்து எழுந்தருள வேண்டும்”.

இவ்வாறு வேண்டிக்கொண்ட மன்னனின் அன்பு வசப்பட்ட கேதீசர் பாலாலயத்திற்கு எழுந்தருள இசைவுற்றது பற்றிய ஒரு குறிப்பு பாலாலயப் பிரதிஷ்டைக்காகச் சங்கற்பித்துத் தியானத்திலிருக்குஞ் சிவாசாரியர் உள்ளத்திலே தோன்றுதலும் ஆகமவிதிக் கிரியைகள் ஆரம்பமாயின. சிவாசாரியார் தமது மந்திர பாவனா கிரியா விசேடங்களினால் திருக்கேதீச்சர மூர்த்தியின் கலைகளை ஆவரண தேவர் கலைகளுடன் கும்பத்தில் ஈர்த்து அமர்த்தியபின் (கலாகர்ஷணம்) மூர்த்தியிற் சாத்திய பூங்கச்சை யானை தொட்டிழுக்கவைத்து மஹாகௌரவமாக அதனைப் பெயர்த்து பாலாலயத்திற் பிரதிஷ்டை பண்ணி முன் தீர்த்த கும்பத்துள் ஈர்த்தடக்கிய கலைகளெல்லாம் மீளவும் மூர்த்தியிற் செறியுமாறு அபிஷேகித்து முடித்ததும் மன்னன் அதன் பூசை நியமங்கட்கான ஏற்பாடுகளை விதித்து மேற் கட்டிடத் திருப்பணியை ஆரம்பித்து அரும் ஆலயத்தை சிறப்பாக வடிவமைத்தார் என்று கூறப்படுகிறது.

தன்னகத்திற் சிவதரிசனம் பெற்றிருக்குஞ் சிவயோகியின் சிரம், கண்டம், மார்பு என்ற பகுதிகளைப் பிரதிநிதிப்பனவாகிய மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்ற மூன்றுக்கும் அளவுகோலி, கருங்கற்பாறையிட்டடித்துத் தளமாக்கிய பின், சுவர்ச்சிற்ப உறுப்புக்களான உபானம், ஜகதி, கண்டம், கபோதம் என்பன யாவுமமையச் சுவரெழுப்பி வியாழவரியும் வைத்து உத்தரமிட்டு மேற்கூரையாகக் கருங்கற்-துண்டங்கள் பரப்பி அமைக்கப்பட்டது கோயில். இதன் கருவறைப் புறச்சுவர்களிற் சிற்ப முறைப்படியான புடைப்புக்களும், ஒடுக்கங்களும் அமைந்திருக்கின்றன. இடையிடையே மகரதோரணத்தைத் திருவாசிபோல் அமைத்த அலங்காரமுள்ள மாடப்புரைகளும்,

மாடப்புரையொவ்வொன்றின் இரு மருங்கும் சிங்கத் தலையுருவங்களோடுள்ள கூடுகளும் அமைந்து கங்கை கொண்ட சோழேச்சரத்துக் கர்பக்கிருக சிற்பப்பாணியை நினைவூட்டுவனவாயிருக்கின்றன. மாடப்புரைகளுக்கிடையே உருவமைப்-பான ஒட்டுத் தூண்களும், உத்தரத்தின்கீழ் வனப்பொளிருஞ் கும்ப பஞ்சரங்களும் வியப்பூட்டும் வகையில் அமைந்திருக்கின்றன.

கருவறையின் மேலமைப்பும் விமானம் திரிதள விமானமாய்க் கோஷ்ட பஞ்சரங்கள், கும்ப பஞ்சரங்கள் என்ற சிற்ப அம்சங்களும் வகைவேறுபட்ட கூடுகளும் நிரம்பி இராமேச்சரத் திருக்கோயில் விமானம் போல் அமைவதாயிற்று. விமானத்தின் கண்கள் போற் பலவாயமைந்த கூடுகள் அதில் நிறைந்திருக்குங் காட்சி விசுவரூபத்தில் சிவனுக்கு எங்கெங்கும் கண்கள் என்ற நிலையைப் பிரதிபலிப்பதாயிருந்தது. விமானச் சுற்றுலமைந்து சிறுசிறு பவளம்போல் விளங்குஞ் சாலபஞ்சரங்கள் திருக்கேதீச்சரனது விமானத்தைச் சேவிக்க மேலுலகத்திலிருந்து வரும் தேவர்கள் இளைப்பாறுதற்காக ஆறுதற்சாலைகளென்றெண்ணத்தக்கவாறு அமைந்துள்ளன.

அர்த்த மண்டபத்து வட பக்கவாயில் தென்பக்க வாயிலிரண்டிலும் ஒன்றுக்கிருசோடி வீதம் துவாரபாலகர் உருக்கள் விளங்குகின்றன. இத்தகைய துவாரபாலகர் கருவறைமுன் ஒரு சோடியும் அர்த்தமண்டப முன் வாயிலில் ஒரு சோடியுமாக வேறும் நான்கு துவாரபாலகர்கள் அமைந்துள்ளன.

முடியின்மீது முத்தலைச்சூலம், நான்கு புயங்கள், கடுகடுப்பான முகத்தோற்றம், சுழலுங் கண்மணிகள், வாயிதழை அதுக்கி நெருடும் வக்ர தந்தம், சுட்டுவிரல் நிமிர்த்தியபடி ஒருகை, தண்டூன்றியபடி மறுகை என்ற இந்நிலையில் நிற்கும் துவாரபாலகர் நிலை, அங்கணைவோர் கிடுகிடு நடுக்கத்தோடு தயங்கி முன்னிற்கப் பணிக்கும் பாவனையாயிருக்கும் இத் துவாரபாலகர் உருவம் சுட்டுவிரல் நிமிர்த்திய கையால் அச்சுறுத்தும் பாவனையும், அபய முத்திரை தாங்கிய கையால் ஆறுதல் தரும் பாவனையும் கொண்டிருத்தலை உற்றுணரின், “சுவாமி உள்ளேயிருக்கிறார் கவனம்! நில் இங்கே” என எச்சரிப்பதும், “கர்வமில்லாமல் உள்ளணைந்தால் உனக்கும் அபயந் தருவார்” என உறுதி உணர்த்துவது-மாயிருக்கும். இவை இமைப்பொழுதும் எம் ஈசனை நினைவுபடுத்துவன.

இந்த அர்த்த மண்டபத்துக்கு முன்னால் மஹாமண்டபத்தில் முழுக்கற்களாலான சித்திரத் தூண்கள் நிரைத்திருக்கும். அத் தூண்களின் பட்டிகை தோறும் பத்மம், அன்னம், மகரம், யாழிசைக்குங் கின்னரர், இயக்கர் என்ற அழகொளிருஞ் சிற்ப உருக்கள் விளங்கும். இம் மண்டபத்தின் சுவர்கள் நான்கிலும் மாடப்புரைகள் பல. ஒவ்வொன்றிலும் திரிபுர சங்காரம் முதலிய சிவனது எண்வகை வீரச் செயல்களையுஞ் சித்திரிக்கும் அழகொளிருஞ் சிற்பங்கள் விளங்கும். இவை, இராஜேந்திரனது வீரப் பிரதாபப் பாங்கான ஆளுமைப் பண்பினைப் பிரதிபலிப்பனவாகக் கண்டு நயக்கத் தக்கனவாகும். மாடப்புரைகளின் இடைவெளி தோறும் சிவலீலைகளை விளக்கும் வர்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கும். யானையுரிக்கையிற் சிவபெருமானிடத்துப் புலப்படும் அகோர தேஜசைச் சகிக்க முடியாமல் உமாதேவியார் முருகனையும் அணைத்துக் கொண்டு அஞ்சியோடுங் காட்சியொன்றில் ஓடுகிற உமாதேவியார் இடையில் தரித்து நின்று திரும்பிப் பார்க்கையில் சிவன் உரித்தெடுத்த யானைத்தோலைத் தம்மேல் போர்த்தல் மூலம் அவரது அகோர தேஜஸ் அடங்கக்கண்டு மெல்லத் திரும்பிவருங் காட்சியும் வந்தணைந்த அம்மையைப் பார்த்துச் சிவன் சிரிக்க அவர் நாணி நிற்குங்

காட்சியும் மற்றொன்றில், இவை அம்மண்டபத்துச் சுவரிற்காணும் உயிரோவியங்களிற் சிலவாகும். இத்தகைய வர்ண ஓவியங்களெல்லாம் தம்முள் ஒன்றுடனொன்று கதைப்பன போலவும் தமது அழகில் ஈடுபட்டு ரசிப்பார்க்கு நீள்கதையளப்பன போலவும் அமைந்திருக்குங் காட்சி அற்புதமானதாகும். இம்மஹாமண்டப முகப்பில் வாயில் மேற்படிப்புக்கு மேற் கமலாசனத்தில் அமர்ந்திருக்குங் கஜலட்சுமியின் சிலையழகும் வெகுரம்மியான ஒன்றாகும்.

இம்மஹாமண்டபத்துக்கு முன்னாக நீண்டகன்ற பெருமண்டபம் ஒன்றில் நிரை நிரையாயமைந்த தூண்கள் ஒவ்வொன்றிலும் நாயன்மார் அறுபத்துமூவர் சிற்பங்கள் அமைந்து விளங்கும். இது சைவநாயன்மார் மீது சோழமன்னர் கொண்டிருந்த அளவிறந்த அன்பிற்கு அறிகுறியாகும். திருநெறித் தமிழிசை வளர்த்தோரை சிறப்பாக போற்றும் தன்மை சிறப்பானது. சண்டீசநாயனாரைத் தமது திருவடிக்கீழ் அமரவைத்துச் சிவபெருமான் தமது திருமுடிக் கொன்றைமாலையைச் சூட்டியபோது சண்டீசர் முகத்திற் பொலிந்த உபசாந்த நிலையைக்கூடச் சண்டீசநாயனார் சிற்பம் மிகத் துலக்கமாய்த் தெரிவிப்பதாயமைந்திருக்கிறது. தம்கைநரம்புத்துய் ஒவ்வொன்றும் தமக்கெழும் நினைவலை ஒவ்வொன்றையும் அடியொற்றிப் பிசகாமற்செல்லுமாறு பணிகொள்ளுஞ் சிற்பர் கைபடுந் தோறும் அக்கற்றூண்களானவை பிரியநாயகன் கைப்பரிசம்பட்ட மாத்திரத்தே அவன் வசமாகு நாயகிபோலக் குழைந்து கொடுக்கின்றமையால் தம்மிற் கலைமெருகேறுவது பற்றிய உணர்வு அவற்றுக்குமுண்டு போலும் என்ற எண்ணம் அவைகளைக் காண்பார் கருத்தில் தோன்றாதிருக்காது. இம்மண்டபச் சுவர்களில் பல வர்ணச் சமநிலைப்பாட்டினால் எழில்மிக்கொளிரும் பூத உருவங்கள் எதிரெதிர் நிரைநிரையாயமைந்தன. முகத்தில் விழிகள் பிதுங்க மெய்யில் வியர்த்துளி அரும்ப விலாப்புறத்தில் ஒருகையூன்றியபடி மிகப்பெருங் கலசங்களைத் தலையிற் சுமந்துகொண்டு அசையும் உடற்பருமையுள்ள இப்பூதநிரைகளின் காட்சியானது, இராஜேந்திரன் கங்கைப் பிரதேசத்தை அடிமைப்படுத்திய நாளில் பெருமட்கலங்களிற் கங்கை நீர் நிரப்பி வடவரைக்கு கொண்டு சோழகங்கவாவிக்குச் சுமந்து வந்த காட்சியைப் போல இருக்கிறது. இம்மண்டபத்தின் முகப்பிலே ஏழடி உயரமும் அதற்குத் தக்க நீள அகலமும் வாய்ந்து பலவர்ணங்களுள்ள சேரம் தன் முதுகில் விளங்க நந்தியொன்று படுத்திருக்கும் பளிங்கு மண்டபமொன்றுளர். இந்நந்தி மண்டபத்தின் முன் இருபுறமுங் கோணத்திசையில் நீளும் ஆனைத் துதிக்கையுருவிலான அணைச்சுவர்களின் முன்புறமாகக் குறுங்காலும் மேலுயர்ந்து நீண்டு வளையும் நாசியும், பூந்தொடைபோல் நீளும் வாலும் உள்ள மகர சிற்பங்கள் நிரையேயமைந்தன. இவ்வலங்காரத்தோடு கூடிய திருமுற்றத்தில் ஐந்தடுக்குக் கோபுரமாக உள்வாயிற் கோபுரம் அழகு சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைவதாயிற்று.

இக்கோயில் முதலாவது திருச்சுற்றில் சம இடைவெளி பொருந்த அமைந்தன பெருந்தூண்கள். அவற்றினிடைவெளி துாறும் கூர்த்த பவளக் கொம்புகளும், மாணிக்கத் தண்டைகளும் உள்ள பருத்த இடபங்கள் கெம்பீரமாகப் படுத்திருக்கும். தூண்களின் பட்டிகைப் புடைப்புத் தோறும் கலைநயம் வாய்ந்த நடன நாட்டியச் சிற்பங்கள் பிரமாதமாயிருக்கும். கருத்தில் இடம்பெறுகின்ற அழகுணர்ச்சி கையிற் பிடிக்குந் தூரிகையின் கண்வழியே வந்தொழுகுமாறு தெய்வலீலைகட்குப்

புத்துருவங் கொடுக்கையில் தமக்கு நிகழும் அகவுணர்ச்சி பாவ வேறுபாடுகள் பிரதிபலிக்குமாறு அங்குமிங்குஞ் சில சில லளிதரேகைகளால் ஓவியக்காரர் தீட்டி வைத்த சித்திர மண்டபங்கள் இத்திருச்சுற்றிற் பலவாம். தெய்விக சிற்பங்களன்றியும் மலர்களிலும், நீலவானிலும், மாதர் வனத்திலும் படியும் அழகுப் பிரபாவங்களை வர்ண விகற்பத்தால் தோற்றுவிக்குங் கண்ணுள் கைவினைஞர்களின் கைவணங்ணங்களும் ஆங்காங்கு பல வகையிற் காணப்படுகின்றன.

இத்தகைய அழகிரசனை மதர்ப்பு வெளிப்பாட்டாக்கங்களுக்கும் ஆலயத்துக்கும் என்ன தொடர்பென மயங்கவேண்டியதில்லை. இக் கலைஞர்களை ஆக்கிரமித்திருப்பது தெய்விகப்பித்தோ, லௌகிக இன்ப வெறிப்பித்தோ என ஐயுறவும் வேண்டியதில்லை. அழகெனப்படுவன-வெல்லாம் அழகாயிருப்பது எவராலேயோ அவருக்கு இருப்பிடமாயிருப்பது அழகு என்ற விளக்கப் பிடியினாலேயே இத்தகைய அழகுப் படைப்பனைத்துங் கோயிற் படைப்பில் இடம்பெற்றன என்ற உண்மையால் அறியப்படுகிறது. இத்தகு விசேடங்களோடு கூடிய இத்திருச்சுற்றில் அமைந்த பிரகாரக் கோயில்களுள் திருக்கேதீச்சர வரலாறு நாயகனாகிய கேதுவுக்கும் ஒரு சிறுகோயிலும் கேது கேதீச்சரனைப் பூசித்த நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் விமானத்தோடு பொருந்தி விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

முதற்சுற்றுக்கு இப்பால் நேர்சந்தியிற் பெரிய அளவிலான சகஸ்ரதள கமலமொன்றமைந்த மேல் உட்பக்கத்தோடு கூடியதாயிருந்தது இரண்டாஞ் சுற்று. அதன் முகப்பில் அமைந்தது சகல அலங்கார அமைப்புக்களோடுங் கூடிய, ஏழுநிலை மாடமான இராஜகோபுரம். இதன் வாயில் இருபுறத்திலும் எவ்வித தண்டுமிண்டுக்கும் எதிர் தண்டுமிண்டாகப் பொருந்தவல்ல ரௌத்திரக்களை பொலிய முதுகையும் இடையையும் ஒயிலாகச் சரித்து வக்கிரதந்தத்தினால் இதழை அதுக்கி ஒருகால் மடித்து ஒருகாலூன்றியபடி தெய்வீக சோபை மிக்க துவாரபாலக மூர்த்தங்கள் அமைந்துள்ளன. இராஜேந்திரன் படைத்த ஈழத்து இராஜராஜேஸ்வரம் இருந்த சீர் இவ்வாறாக புத்துயிரூட்டப்பட்டு தற்போது, தருமை ஆதீனத்தால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். தென்னிந்திய பேரரசான இராஜராஜசோழனும், மகன் இராஜேந்திர சோழமன்னனும், இசைத்தமிழ் வளர்ச்சிக்கும், சைவத்திற்கும், சிற்ப, கட்டடத்துறை பாரிய வளர்ச்சிக்கும் வித்திட்ட பெருந்தகையாளர்கள். அவர்களுடைய படைப்பிலுருவான ஈழத்து திருக்கேதீச்சர ஆலயமும், அதன் சிறப்பும் என்றென்றும் இம் மன்னர்களின் முயற்சிகளை கட்டியம் கூறும்.

**உசாத்துணை நூல்கள்**

1. கலாநிதி. எஸ். பத்மநாதன், யாழ். பல்கலைக்கழகம் – கிங்டம் ஒவ் யவ்னா – 1990.
2. அல்பேட் ஈ றொபேர்ட்ஸ், விச்வ கன்ம வம்ச விநிச்சய விமர்சனம்.
3. **MoV. Mahavamsa 1950, (ed), Geiger. W. (Colombo)**
4. **Rasanayagam. S. 1926, Anciant Jaffna (Madras)**
5. சற்குணம். எம். 1976, ”திருக்கேதீஸ்வரம் திருக்குடத் திருமஞ்சனமலர்.
6. நேரடிகள ஆய்வில் பெறப்பட்ட தகவல்கள் தொகுக்கப்பட்டன.